மினுவான்கொட பிரதேச சபை - 2024
---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

மினுவான்கொட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மினுவான்கொட பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமானதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதுமானதும் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தி மற்றும் அதன் இணைப்பு 2 இன் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல் EG 6.2 இன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் காசுபாய்ச்சல் கணிப்பிடும் போது மீளாய்வாண்டின் மிகைக்கான சீராக்கமாக காண்பிக்கப்பட்ட ரூபா 151,336,564 பெறுமதி எதற்குரியதென கணக்காய்வில் வெளிப் படுத்தப்பாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் விரிவான வருமானத்தில் சீராக்கப்பட்ட பெறுமானத்தில் காலக்கழிவு ரூபா 27,813,114 தொகை ரூபா 29,602,865 ஆக ரூபா 1,789,751 அதிகரித்து ஆண்டின் மிகை	2025 ஆம் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது சரி செய்யப்படும்.	நியமத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

	சீராக்கப்பட்டிருந்தது. மேலும் விரிவான வருமானத்தில் சீராக்கப்பட்ட வட்டி வருமானம் ரூபா 58,230,157 மிகையில் குறைத்தமைக்கு விரிவான வருமானத்தில் சீராக்கப்பட்ட சொத்துக்கள் விற்பனையிலிருந்தான நட்டம் ரூபா 11,909 மிகையில் சேர்க்கப்பட்டு காண் பிக்கப்பட்டிருக்கவில்லை. விரிவான வருமானத்தில் சீராக்கப்பட்ட ரூபா 399,747 ஆன கடன் வட்டி செலவினம் மிகையில் சேர்க்கப்பட்டு காண்பிக்கப் படாதிருந்ததுடன் ரூபா 2,884,652 இருப்பு பெறுமதி அதிகரித்தமை ரூபா 2,868,643 ஆக சீராக்கப்பட்டிருந்தது. மேலும் சீர்திருத்த வேண்டியவைகளின் கழித்தல்கள் ரூபா 103,807,221 இற்கு பதிலாக ரூபா 98,815,962 ஆக காண்பிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் விரிவான வருமானத்தில் சீராக்கப்பட்ட மோட்டார் வாகன அகற்றுதலின் இலாபம் ரூபா 499,520 மிகையில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.26 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 245,626,236 காசு மற்றும் காசுக்கு சமானவைகள் ரூபா 245,647,232 ஆக காண்பிக்கப் பட்டிருந்தது.	காசு மற்றும் காசுக்கு சமமானவை கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தி மற்றும் அதன் இணைப்பு 02 இன் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல் EG 6.3 இன் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சலைக் கணிப்பிடும் போது மீளாய்வாண்டின் போது முதலீடு விடுவிடுத்தல் ரூபா 229,032,632 மற்றும் புதிய முதலீடு ரூபா 235,167,691 காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சலாக தனித்தனியாக காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் முதலீட்டு காசு உட்பாய்ச்சலாக ரூபா 66,801,527 காண்பிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது நிலையான வைப்பு வட்டி வருமானமாக பணமாகக் கிடைத்த ரூபா 51,274,355 முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	முதலீட்டின் மாற்றங்களை குறிப்பிடுதல் போதுமானது ஆகும்.	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	நியமத்தின் அத்தியாயத்தின் இலக்கம் 3.30 இன் பிரகாரம் மற்றும் அதன் இணைப்பின் 2 இன் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல் EG 6.4 இன் பிரகாரம் நிதி செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சலைக் கணிப்பிடும் போது	2025 ஆம் ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

	மீளாய்வாண்டில் பணமாக செலுத்தப்பட்ட ரூபா 399,747 நிதி வட்டி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	சரிசெய்யப்படு ம்.	
(உ)	நியமத்தின் இணைப்பு 2 இன் விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல் EG 2.7 இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது காணி நன்கொடையாக மூலதன மானியக் கணக்கில் ரூபா 1,100,000 பெறுமதி விரிவான வருமானக் கூற்றில் இனங்காண்பதற்காக எடுக்கப்பட்ட சதவீதம் இனங் காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அந்த கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தின் போது கொள்கையொ ன்று தயாரிக்கப்படு ம்.	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஊ)	நியமத்தின் 06 ஆம் அத்தியாயம் மற்றும் விரிவான விளக்கமளித்தல் இன் EG 3.2 ஆம் பந்தி மற்றும் நியமத்தின் 18 ஆவது அத்தியாயத்தின் 18.9 ஆம் பந்திக்கு முரணாக தெவலகொல உப அலுவலகத்தில் கட்டிட நிர்மாணம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு ஒரே கட்டிடப் பகுதியாக பூர்த்தி செய்தல் மற்றும் கட்டடம் நிர்மாணிப்பதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களின் போது பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தனித்தனியாக காண் பிக்கப்பட்ட கிரயத்திற்கான பெறுமதி மாதிரியாக கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே 30 கட்டிடங்களின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யும் போது 98 சந்தர்ப்பங்களின் போது அதற்காக செலவிடப்பட்ட கிரயம் ரூபா 40,230,636 ஆக இருந்த போதிலும் ரூபா 42,677,000 தொகையில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடம் மீள் மதிப்பீடு கணக்காய்வில் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது.	2025 இன் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது சரி செய்யப்படும்.	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(எ)	நியமத்தின் 10 ஆவது அத்தியாயத்தின் 10.8 ஆம் பந்தி மற்றும் 10.10 ஆம் பந்திக்கு முரணாக சபையினால் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான கட்டளையின்றி 2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்திற்காக பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 86,497,598 கடன்கொடுத்தோர் ஒதுக்கீடுகள் மேற்கொண்டு வீதிகளின் கீழ் முதலனமாக்கப்பட்டிருந்தது. அதனால் இந்த அளவினால் வீதிகள் மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.	அபிவிருத்தி செயற்திட்டத்தி ற்காக செலுத்த வேண்டிய பட்டியல்கள் ஆகும்.	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஏ)	நியமத்தின் 18 ஆவது அத்தியாயத்தின் 18.9 ஆம் பந்தியின் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டின் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து	எதிர்காலத்தில் சரிசெய்யப்படு ம்.	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள்

	வகுப்புக்கள் 05 இன் விடயங்களை சந்தைப் பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.		தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஐ)	நியமத்தின் 18 ஆம் அத்தியாயத்தின் 18.10 ஆம் பந்தியின் பிரகாரம் 7 சொத்து வகுப்புக்களை மீள் மதிப்பீடு செய்யும் போது இனங்காணப்பட்ட மீள் இலாபம் ரூபா 147,017,294 மிகையில் சீராக்குவதற்குப் பதிலாக சொத்து வகுப்புக்களில் மொத்தப் பெறுமதியும் அகற்றுதல் ரூபா 108,512,119 திரண்ட நிதியத்தில் வரவு வைத்து மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 38,505,175 ஒதுக்கம் மற்றும் ஏற்பாடுகள் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சொத்துக்களில் காணப்படுகின்ற மீதி ஒரு கணக்கிலும், மீண்டும் சொத்துக்கள் வழங்குவதால் இன்னும் ஒரு கணக்கிலுமாக இரண்டு கணக்குகளின் மூலம் சீராக்கப்பட்டிருந்தது.	எதிர்வரும் ஆண்டில் சரிசெய்யப்படும்.	நியமத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் போது நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் வைப்பை வருமானத்திற்கு எடுப்பதற்கும் மீளாய் வாண்டின் விரிவான வருமானமாக காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 681,324 திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	இந்த ஆண்டின் வருமானத்திற்கு எடுக்க முடியாதிருந்தது.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(ஆ)	அரசாங்கத்தின் உதவிப் பணக் கணக்கில் 2023 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 5,000,000 மீண்டெழும் மானியம் திரண்ட நிதியத்தில் சீராக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மூலதன மானியக் கணக்கில் கீராக்கப் பட்டிருந்தது. அதனால் மூலதன மானியம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரி செய்யப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(இ)	கடன் கொடுத்தோர் மீதியில் 05 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய ரூபா 4,599,390 மற்றும் கட்டிட நிர்மாணங்களில் 02 செயற்திட்டங்க ளுக்குரிய ரூபா 3,655,122 கூட்டுத்தொகைான ரூபா 8,254,512 மூலதன மாக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினமாக காண்பிக்கப்பட்ருந்தது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.

(ஈ)	மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் கட்டி நிர்மாணங்களில் 10 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 12,783,127 தொகைக்கு உரிய கட்டிடம் பூர்த்தி செய்தல் மற்றும் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டிடங்கள் தனித்தனியாக இனங்கண்டு மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(உ)	மாகாண பராமரிப்பு செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி மானியங்களின் கீழ் கட்டடங்களைப் பழுதுபார்ப் பதற்காக மீளாய்வாண்டின் போது 03 செயற்திட்டங்களுக்காக கிடைக்கப்பெற்ற ரூபா 4,470,627 மீண்டெழும் செலவினத் திற்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்த மானியமாக மீளாய்வாண்டின் வருமானமாக காண்பிக்க வேண்டியி ருந்த போதிலும் மூலதன மானியமாக காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் குறைவடைந் திருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டிற்கு நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 37,956,474 ஆக இருக்க வேண்டிய போதிலும் விரிவான வருமானக் கூற்றிலும் அது ரூபா 58,230,157 ஆக ரூபா 20,273,683 ஆதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.	பரீட்சித்து தகவல்கள் பெற்ற பின்னர் சமர்ப்பிக்கப்படும் .	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(எ)	2021 ஆம் ஆண்டு முதல் பத்தென்டு வன உப அலுவலகத்தில் காணிக் கூறிடல் விற்பனை செய்வதால் சபைக்கு கிடைக்கப்பெற்ற பொதுக் காணிகள் இரண்டிற்குரிய கூட்டு மொத்தமாக ரூபா 11,532,500 பெறுமதி மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(ஏ)	காணி பட்டோலையில் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் ரூபா 13,050,000 ஆன இணக்கம் செய்யப் படாத வேறுபாடுகளுக்கான காரணங் களை வெளிப்படுத்தாமல் மீளாய் வாண்டில் காணி விற்பனையிலிருந்து கழித்து திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.

(ஐ)	மீளாய்வாண்டிற்காக கணனி பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 715,859 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 199,063 ஆக ரூபா 516,796 குறைத்துக் காண்பிக்கப்பட்டமையால் மிகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	பரீட்சித்து தகவல்கள் கிடைத்த பின்னர் சமர்ப் பிக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(ஒ)	2023 ஆம் ஆண்டில் விரிவான வருமானக் கூற்றில் வருமானம் மற்றும் செலவினங்களை சீராக்கப்பட்ட சரி செய்தலின் மிகை ரூபா 181,645,647 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 30,650,742 ஆன பிழையான பெறுமதியொன்று மீளாய் வாண்டின் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் சீராக்கப்பட்டமையால் காரணங்கள் வெளிப்படுத்தப் படாத வேறுபாடு ரூபா 150,994,905 ஆகும்.	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(ஓ)	மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற் காக செலுத்தப்பட்ட ரூபா 536,721 ஆன பெறுமதி மீளாய்வாண்டின் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(ஔ)	பூர்த்தி செய்யப்பட்ட வீதி மறுசீரமைப்பு செயற்திட்டங்கள் 03 இன் கீழ் காண்பிக்கப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 3,172.905 இற்கு இடையே ரூபா 2,646,099 ஆன வீதிகள், பாலங்கள், மதகுகள் ஆகவும், ரூபா 526,804 கட்டிடங்களாகவும் மூலதனமாக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய் வாண்டின் செலவினமாக காண்பிக்கப் பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(க)	7 செயற்திட்டங்களின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட பெறுமதி ரூபா 7,179,246 ஆன கட்டிடங்கள் வீதிகளின் கீழ் முலதனமாக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(கா)	2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறை பாடுகள் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது காணி ஏலத்தில் இருந்து கிடைத்த பொது நிலக்கூறுகள் இரண்டினை	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.

	மூலதனமாக் கும் போது ரூபா 1,100,000 ஆன ஆகக் குறைந்த விலையில் மூலதன மாக்கப்பட்டமையால் ரூபா 15,810,000 காணிப் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்ட தவறு சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுக்கப்படும்.	
(கி)	2023 ஆம் ஆண்டின் போது மின்மெதுர பழுதுபார்த்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 291,062 செலவினமாகக் காண்பிக்கப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 270,000 தொகையில் மீள் மதிப்பீடு செய்து பொருத்திகளின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறை யல்லாச் சொத்துக்கள் ரூபா 270,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டி ருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(கீ)	தெவலபல உப அலுவலகத்தில் கட்டிடம் மீள் மதிப்பீடு செய்யும் போது ரூபா 1,411,410 பழுதுபார்த்தல் கிரயம் ஒன்று ரூபா 1,718,000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டமையால் கட்டிடப் பெறுமதி ரூபா 306,590 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டதுடன் கட்டிடத்தின் கீழ் ரூபா 2,100,000 காணி யும் ரூபா 2,875,000 வீதிப் பாலங்கள் மற்றும் மதகுகளும் மூலதனமாக்கப் பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.
(கு)	கட்டிடத்தில் காணி மற்றும் வீதி பாலங்கள், மதகுகளின் பெறுமதி உள்ளடங்கியதன் காரணமாக ரூபா 137,484 தொகை ஆண்டின் பெறுமானத்தைக் குறைத்தும் ரூபா 163,125 திரண்ட நிதியம் குறைத்தும் ரூபா 245,641 கட்டிட திரண்ட பெறுமானத் தேய்வு அதிகரித்தும் காண் பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீடு செய்தல் சரியாக மேற்கொள் ளப்படல் வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 02 கணக்கு மீதிகளுக்கும், அவற்றுக்குரிய பட்டோலை களின் கூட்டுத்தொகைகளுக்குமிடையே ரூபா 11,839,138 ஆன இணக்கம் செய்யப்படாத வேறுபாடு காணப்பட்டது.	பரீட்சித்த பின்னர் தகவல்கள் சமர்ப்பிக்கப்படும்.	வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 38 (2) ஆம் பிரிவு	நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு முறை மையொன்று பேணிச் செல்லப்படுகின்றதை அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக ஏற்கனவே மேற்கொள் எப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்க பூர்வமானதாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள் வேண்டி யிருக்குமாயின் அதனை மேற்கொண்டு பிரதான கணக்கீட்டு உத்தியோ கத்தரால் நிறைவேற்ற வேண்டிய எழுத்து மூல மீளாய்வொன்றின் பிரதி யொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	எதிர்காலத்தில் மீளாய்வு அறிக்கை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும்.	தொடர்புடைய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571	பெறுமதி ரூபா 7,342,029 ஆன இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் ஓய்வு பெறச் செய் யப்பட்டிருக்கவில்லை.	வைப்புப் பணத்தை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2006 இன் தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவை			
(i)	3.4.1(ஆ)	2024 யூன் 25 ஆம் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் படி கூட்டு மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 87,598,520 ஆன 65 செயற் திட்டங்களின் முன்னரே திட்ட மிட்டமிடப்பட்ட வகையில்	எதிர்காலத்தில் எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		போட்டியாளர் விலை பெறப் படாத வகையில் கேள்விதார ருக்கு ஒவ்வொரு செயற் திட்டத்திற்கும் ஒரு கேள்வி ஒப்பந்தகாரர் வீதம் மாத்திரம் சமர்ப்பித்து பெறுகை மூல தத்துவங்களை மீறியிருக்கும் போது அந்த ஒவ்வொரு ஒப்பந்தகாரருக்கும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2024 ஆகஸ்ட் 08 ஆம் திகதி மற்றும் 2024 யூன் 13 ஆம் திகதி முறையே கூறுவிலை கோரப்பட்ட 36 செயற்திட்டங்கள் மற்றும் 37 செயற்திட்டங்கள் மேற்கூறப்பட்ட பிரகாரம் கையளிக்கப்பட்டிருந்தது.		
(ii)	2.3.2 (ஆ) (இ), 2.4.1 மற்றும் 2.11.1 (அ)	உடுகம்பள பொது நூலகத்திற்கு ரூபா 1,107,300 ஆன தளபாடங் கள் கொள்வனவு செய்யும் போது இந்த வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2020 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய LGD/09/2019(I) என்ற உள்ளூராட்சி சுற்றறிக்கை	அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் “பீ” கணக்கின் படிவத்தின் பிரகாரம் ஊழியர் கடன் தொடர்பான வருடாந்த கடன் எல்லை அங்கீகரிக்கப்பட்டி ருக்கவில்லை.	2024 இன் பாதீட்டின் மூலம் வருடந்த கடன் எல்லை அங்கீகரிக்கப் பட்டதுடன் கணக்கிற்கு சமர்ப்பிக்கப்படா திருந்த முற்பணம் ‘‘ப’’ கணக்கிற்கு உரிய ஊழியர் கடன் இணக்கக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டு ள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 123,310,520 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,650,742 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'
i.	வீதவரியும் வரியும்	29,602	32,116	29,249	41,563	34,137	37,083	27,210	39,430
ii.	வாடகை	2,618	2,551	2,987	31	1595,	1633,	2,068	411
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,100	3,428	3,362	67	965	2,466	2,466	-
iv	ஏனைய வருமானம்	552	498	491	120	642	537	467	115
		33,872	38,593	36,089	41,781	37,339	41,719	32,211	39,956

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் ஆதனவரி மற்றும் வரி சிட்டையிடப் பட்ட வருமானம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட ரூபா 2,514 மில்லியன் அதாவது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் 8 சதவீதத்தால் அதிகரித் திருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 41,563 மில்லியன் ஆதனவரி மற்றும் வரி மீதி அறவிட வேண்டியிருந்தது.	வருமானத்தை சேகரிப்பதற்கு முயற்சி எடுக்கப்படும்.	நிலுவை ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கேட்போர் கூடத்திற்காக கட்டணம் அறவிடுவதற்காக மற்றும் மயான நில சேவைகளை வழங்குவதற்கான கட்டணம் அறவிடுவதற்காக 2024 ஆம் ஆண்டின் போது கட்டணம் வர்த்தமானியில் பிரசுரித்து அறவிடப்பட்டிருந்த போதும் அதற்காக உபவிதியொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	உப விதியொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	உப விதியொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மின் மெதுர வியாபாரக் கொட்டகைகளுக்கான கட்டணத்தை அறவிடுதவற்காக கட்டணம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட போதிலும் அதற்காக கட்டணத்தை தீர்மானித்தல் மற்றும் நிருவாகம் தொடர்பான உபவிதியொன்று தயாரித்து அங்கீகரிக்கப்படாதிருந்தமையால் பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) மற்றும் 126(vi) (இ) பிரிவுகளுக்கு முரணாக இருந்ததுடன் அந்த கொட்டகைகளை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.	உப விதியொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	உப விதியொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022 சனவரி 27 ஆம் திகதிய இலக்கம் 2264/18 என்ற வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையினால் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக 2024 ஆம் ஆண்டிற்குரிய மெய்மை ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் தற்போது தயார் செய்யப்படுகின்றது.	வர்த்தமானியின் பிரகாரம் வருடாந்த மெய்மை ஆய்வு மேற்கொள்ளப் படல் வேண்டும்.

(ஆ)	குடுகம்பொல பிரதான அலுவலகம் அமைந்துள்ள 103.7 பேர்ச் காணி மற்றும் நில அளவுடன் 63.75 பேர்ச் அளவான காணி மற்றும் பொதுச் சந்தை அமைந்துள்ள 22.45 பேர்ச் காணி என்ற மூன்று காணிகளின் பெறுமதி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது பதிவேடுக ளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மீள் மதிப்பீட்டுப் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.
(இ)	வீதி பழுதடைவதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 24 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 253,402 மற்றும் 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை நிருவாக செலவினமாக கிடைக்கப்பெற்ற ரூபா 952,378 வருமானமாக இனங்காணப்படாமல் வைப்பாக நிறுத்தி வைக்கப்பட்டி ருந்தது.	எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஈ)	2000 ஆம் ஆண்டு 2020 ஆம் ஆண்டு வரை ரூபா 811,727 ஆன 32 முற்பண மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பரீட்சித்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	முற்பண மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 36 செயற்திட்டங்களுக் காக கிடைக்க வேண்டியதாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 1,223,202 கடன் பட்டோர் மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய தொகையை பெற்றுக்கொள்வது தொடர்பாக கோரிக்கை கடிதம் விரைவாக அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன்பட்டோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ரூபா 5,715,664 கடன் கொடுத்தோர் மீதி செலுத்தப்படாமல் முன்கொண்டு வரப்பட்டதுடன் அந்த மீதியின் உள்ளபடியாக செலுத்த வேண்டியிருந்ததா, செலுத்த வேண்டி யில்லையாயின் உறுதிப்படுத்தி	அந்த மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	கடன் கொடுத்தோர் மீதியை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை

	பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		எடுத்தல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டில் 5 களஞ்சிய விடயங் களுக்குரிய விரிவான வருமானத்தில் சீராக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 32,837,317 செலவினம் உள்ள படியாக ஆண்டில் விநியோகித்தல் களின் செலவினங்களுடன் இணக்கம் செய்யப்பட்டதா என்பதை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு கணக்காய்வில் முடியாதிருந்தது.	பயன்படுத்தப்பட்ட இருப்புக்கள் தொடர்பான தகவல்கள் இருப்புப் பதிவேட்டில் குறிப்பி டப்பட்டுள்ளது.	சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டில் வீதிகள், பாலங்கள், மதகுகள் கணக்கில் ரூபா 253,106,630 பெறுமதியொன்று மூலதனமாக்கப்பட்டி ருந்த போதும் ரூபா 156,765,123 ஆன பெறுமதிக்குரிய செயற்திட்டம் / வீதிகள் எவை என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்கா ன செலவினம் வீதியில் ஒதுக்கி காண்பிக்க முடியாதிருந்தது.	செயற்திட்டம் / வீதி என்ன என்பது தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஐ)	மீளாய்வாண்டின் போது சபை கட்டிடத் தொகுதியின் கீழ் வீதி மறுசீரமைத்த லை மேற்கொள்வதற்கான தொகையில் கொள்ளப்பட்ட கொடுப்பனவாக ரூபா 90,998,630 காண்பிக்கப்பட்டதுடன் ரூபா 20,340,203 இற்குரிய விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு சபை தவறியிருந்தது.	எதிர்வரும் இறுதிக் கணக்குகளின் போது சரிசெய்யப் படும்.	விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உடுக்கம்பொல பொதுச் சந்தையில் மேல்மாடியில் 06 கடைகள் 2025 ஏப்ரல் 29 ஆம் திகதி வரையில் வாடகைக்கு வழங்கப்படாமல் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. உடுக்கம்பொல கடைகளை வாடகை உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 07 இன் பிரகாரம் ஆதனங்களை உப வாடகைக்கு வழங்குவதற்கோ அல்லது வாடகைக்கு வழங்குதலை கூட்டு முயற்சியாக நடாத்திச் செல்வதற்கோ அல்லது உரித்தற்றதாக்குவதற்கோ	உப வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக பரிசோதனைகள் நடாத்தி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குச் சொந்தமான ஆதனங்களை உப வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

	முடியாதிருந்த போதிலும் கடை இலக்கம் 1, 3 மற்றும் 5 இற்காக சபைக்கு கிடைக்கின்ற வாடகை வருமானம் ரூபா 9,000 ஆக இருந்த போதிலும் கூட்டுப்பெறுமதி ரூபா 41,000 தொகையில் வெளித் தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.		
(ஆ)	மாபொதல உப அலுவலகத்திற்குரிய 07 கடைகள் மற்றும் மினுவாங் கொடயில் 01 கடை முதல் 05 வரையான கடைகளை வாடகைக்கு வழங்கு வதற்குரிய கோவைகள் சபையிடம் காணப்படாமையின் காரணமாக இந்தக் கடைகளுக்குரிய உடன்படிக்கை மற்றும் உரிய ஏனைய ஆவணங்கள் காணப்படாதிருந்தமையால் கடை வாடகை அறவிடுவதற்கு எந்தவொரு சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுப்பதற்கு முடியாதிருந்தது.	இந்தக் கடைகளுக் குரிய ஆரம்ப கோவையைக் கண்டறிய முடியாதிருந்ததுடன் புதிய கோவையொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	வாடகைக்கு வழங்குவதற்குரிய கோவைகள் தொடர்பாக விரைவாக உரிய நடவடிக்கை எடுத்து வாடகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	புதிய கடை இலக்கம் 2, 5, 6, 7 மற்றும் 8 இற்காக வாடகையாளர்கள் எவரும் கடைக்காக உடன்படிக்கை செய்வதற்கு முன்வராதிருந்ததுடன் அதில் கடை இலக்கம் 5, 7 மற்றும் 8 வாடகை உடன்படிக்கை கைச்சாத்தி டாமல் வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.	முறையான பிரகாரம் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடைகளை வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	ஆதனவரி ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் உடுகம்பொல, பத்தன்டுவன மற்றும் மாபொதல உப அலுவலகங்களில் ஆதனங்கள் 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் ஆதனவரி அறவிடப் படுவதுடன் அதில் கிராம உத்தியோ கத்தர் பிரிவுகள் 39 உடன் மாபொதல உப அலுவலகப் பிரதேசத்திற்குரிய பிரதான 05 வீதிகளில் 100 மீற்றர் தூர அளவும், கிராம உத்தியோகத்தர் பிரிவும் 38 உடன் பத்தன்டுவன உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்தள்ள பிரதான வீதிகள் 09 இல் 100 மீற்றர் தூர அளவும் ஆதனவரி	எதிர்காலத்தில் கூடிய விரைவில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆதனவரி பிரதேசங்களை அதிகரித்து மதிப்பீட்டை விரைவாக மேற் கொண்டு ஆதனவரி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதிகாரப் பிரதேசத்தை அதிகரிக்காமை யினால் மற்றும் மதிப்பீடு தாமதமடைந் தமையால் சபைக்கு அறவிட வேண்டி யிருந்த ஆதனவரி வருமானம் இழக்கப் பட்டிருந்தது.		

3.4 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் நிர்மாணங்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகைகள் வழி காட்டியின் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
2019 சனவரி 12 ஆந் திகதிய இலக்கம் DMA/01/2019 என்ற முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் இலக்கம் 40(3) பிரிவு மற்றும் நிதிப்பிரமாணக் கோவையின் இலக்கம் 134(1) இன் மூலம் உள்ளகக் கணக்காய்வின் சுயாதீன தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் உள்ளகக் கணக்காய்வு தாக்கங்கள் அல்லது நிபந்தனைகள் இன்றி கணக்காய்வாளருக்கு பக்கச்சார்பின்றி மத்தியஸ்துடன் தீர்மானங்களை எடுப்பதற்காக தேவையான முறையான பணிப் பொறுப்புக்கள் காணப் படவேண்டியிருந்த போதிலும் சபையில் 2024 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுக் குழுவிற்காக சபையினால் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் நியமிக்கப் பட்டதன் காரணமாக மேற்கூறப்பட்ட பிரகாரம் பக்கச்சார்பின்றி அறிக்கையிடு வதற்கும் சுயாதீனமாகச் செயற்படுவதற்கும் இடையூறாக இருந்தது.	வெற்றிடங்கள் காணப்படுகின்றமை யினால் மீள் மதிப்பீட்டுக் குழுவிற்காக ஈடுபடுத்தக்கூடிய வேறுறொரு உத்தியோகத்தர் காணப்படவில்லை.	உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு சுயாதீனமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.